15.03.2021 OS 170/2015 PW1 Name :. Sivalingam

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி

நான் தாக்கல் செய்த ஜெராக்ஸ் நகல்களின் அசல் ஆவணங்கள் யாருடன் உள்ளது என்றால் என்னிடம் தான் உள்ளது. அசல் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து குறியீடு செய்ததற்கு குறிப்பிட்ட காரணங்கள் உண்டா என்றால் இல்லை. வா.சா.அ.52, 53 ஆவணங்கள் எந்த வகையில் இந்த வழக்கிற்கு பொருந்தும் ஆவணங்கள் என்றால் 08.04.1991 மற்றும் 10.04.1991 தேதிகளிட்ட அடமான ஆவணங்களில் கண்டுள்ள சாட்சிகள் குறிப்பிட்டுள்ள முகவரியில் இல்லை என்று காண்பிக்க மேற்படி வா.சா.அ 52 மற்றும் 53 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி நபர்கள் கற்பனையான நபர்கள் என்று சொல்கிறேனா அந்த விலாசத்தில் அந்த நபர்கள் இல்லை என்று சொல்கிறேனா என்றால் கற்பனையான நபர்கள். மேற்படி ஆவணங்களில் அது போன்ற நபர்கள் இல்லை என்று சொல்லவில்லை அந்த விலாசத்தில் வசிக்கவில்லை என்றுதான் சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மேற்படி ஆவணத்தில் கண்டுள்ள விலாசத்திற்கு நான் பதிவு தபால் மூலமாக அறிவிப்பு அனுப்பி திருப்பப்பட்ட அஞ்சல் உறையினை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பஞ்சாயத்தது செயலாளரிடம் அறிக்கை பெறப்பட்டது. மேற்படி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.அ.55 ஆவணங்களானது ராஜலிங்கம் என்பவருக்கு பீ.டி.வோ கொடுத்த அனுமதி ஆணை. மேற்படி ஆவணத்தில் சர்வே எண் மற்றும் செக்குபந்தி கொடுக்கபடவில்லை என்றால் இல்லை சாதரணமாகதான் மேற்படி ஆணையின் சர்வே எண் செக்குபந்தி கொடுப்பது இல்லை. மேற்படி அனுமதி பெறுவதற்கு என்னென்ன ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டது என்று காண்பிக்க ஒப்படைப்பு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

மேற்படி ஆவணத்தில் அசல் என்னிடம் உள்ளது. அசல் ஆவணத்திற்கும் வா.சா.அ.55க்கும் வித்தியாசம் இருப்பதால் தான் அசலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.அ.57 எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் என் தாத்தா பெயரில் சொத்து இருந்தது என்று காண்பிக்க தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வா.சா.அ57ஆனது 2006ம் வருடத்திய ஆவணம் என்றால் ஆமாம். வா.சா.57 ஆவணத்தில் 2வது பக்கத்தில் 9வது காலத்தில் சர்வே எண் 1128/2ஜி என்பது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது அதன் உண்மையான சர்வே எண் 1178/2ஜி அவ்வாறு தவறாக குறிப்பிடப்பட்டதை சரிசெய்ய நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை உயர்நீதிமன்றத்தில் வழக்கு போட்டேன் அது தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி ஆவணத்தில் 3ல் 1 பங்கு மனுதாரருக்கு என்று குறிப்பிட்டுள்ளது மீதி 2 பங்கு யாருக்கு என்றால் அவரது சகோதரர்கள் பெத்தபோயன் மற்றும் கிருஸ்ணன் பாத்தியம். அவர்கள் இருவரும் இந்த வழக்கில் தரப்பினர்கள் இல்லை என்றால் சேர்த்துள்ளேன். தாவா சொத்தை பொறுத்து அவர்கள் பெயரிலும் கூட்டு பட்டா உண்டா என்றால் பெத்தபோயன் பேரில் மட்டும் வருகிறது. கிருஸ்ணன் பெயரில் ஒருகூட்டு பட்டா உள்ளது. என் பெயரில் உள்ள பள்ளி மற்றும் வருவாய் துறை ஆவணங்கள் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்துக்கள் என் தாத்தா மற்றம் பாட்டி பெயரில் உள்ளது அவர்கள் உயிருடன் இருக்கும்போது நான் பிறந்துவிட்டேன் என்று காண்பிக்க தாக்கல் செய்துள்ளேன். நான் எனது குறுக்கு விசாரணையில் ஒத்து கொண்ட சங்கதிகளுக்கு மாறாக பின்னிட்டு இந்த ஆவணங்களை தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தவறான சங்கதிகளுடன் தாவாவை தாக்கல் செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்பதால் தாவா தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.